# கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
ஆளும்கட்சி / எதிர்கட்சித் தலைவர்கள்,
வார்டு குழுத் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்,
(கோவை கிழக்கு, கோவை மேற்கு,
சிங்காநல்லூர், தொண்டாமுத்தூர்
மற்றும் பேரூர் சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்,
(கோவை மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

ந.க.எண் : **1072/ 2010** / எம்சி. **8** நாள் : **15 .2.2010**

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற அவசரக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.

---

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற அவசரக் கூட்டம் வருகின்ற **18.02.2010** வியாழக்கிழமை பிற்பகல் **3.00** மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத்தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

இணைப்பு : 1

/ உண்மைநகல் / உத்திரவின்படி/

15/02/10

மாமன்ற செயலாளர்

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற அவசரக் கூட்டம்
## பிப்ரவரி 2010

### நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| வ.எண் | இ). தீர்மானத்திற்குரிய பொருள் |
| 1 | பொறியியல் பிரிவு - உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு - சாலைப் பணிகள் மேற்கொள்ளுதல் - ரூ. 26.31 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது - அரசாணை வெளியிடப்பட்டது – மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் - தொடர்பாக |
| 2 | பொறியியல் பிரிவு - உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு – அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துதல் - ரூ. 703.75 இலட்சம் - அரசு மானியம் வழங்கி அரசாணை வெளியிடப்பட்டது – மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் - தொடர்பாக |
| 3 | Jnnurm – திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் - சாலை சுத்தப்படுத்தும் 3 இயந்திரங்கள் வாங்குதல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 4 | பொறியியல் பிரிவு - 5 அபிவிருத்திப் பணிகள் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் கோருதல் -தொடர்பாக |
| 5 | பொறியியல் பிரிவு - வார்டு எண் 34 – தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்தில் தங்கும் விடுதி கட்டுதல் - நகராட்சி நிர்வாக இயக்குநரக ஒப்புதல் பெறுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 6 | பொறியியல் பிரிவு - 7 அபிவிருத்திப் பணிகள் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் கோருதல் -தொடர்பாக |
| 7 | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண்.64 - மேட்டுப்பாளையம் சாலை பேருந்து நிலையத்தில் கூடுதல் வசதிகள் செய்தல் - மதிப்பீடு ரூ.75.00 - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 8 | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுப்பணி - வார்டு எண் 34 மற்றும் 64 – மேட்டுப்பாளையம் சாலை, பை-பாஸ் சாலை, உள்ளிட்டவை- சாலை சந்திப்புகளை அபிவிருத்தி செய்தல் பணி – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 9 | பணியமைப்பு - திருமதி எ.பி. உமா மகேஸ்வரி, பல நோக்கு சுகாதார பணியாளர், சிங்காநல்லூர் நகர்நல மையம் - உடுமலைப்பேட்டை நகராட்சிக்கு மாறுதல் கோருவது – மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 10 | பணியமைப்பு - கோவை மாநகராட்சி – திருமதி எக்ஸ். பிலோமினா, பல நோக்கு சுகாதாரப் பணியாளர், கே.கே.புதூர் நகர்நல மையம் - சென்னை மாநகராட்சிக்கு மாறுதல் கோருவது — மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 11 | வடக்கு மண்டலம்- சீனிவாசபுரம் மாநகராட்சி திருமண மண்டபம் - உரிமக் காலம் நீடித்தல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 12 | மேற்கு மண்டலம் - நீதிமன்ற உத்திரவின்படி எம்.ஜி.ஆர். மார்க்கெட்டில் கடை ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| 13 | மேற்கு மண்டலம் - வார்டு எண் 57 – சமுதாயக்கூடம் -வாடகை நிர்ணயம் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |

நன்றியுரை

**அ) <u>திருக்குறள்</u>**

**சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சா னவனை**
**இகல்வெல்லல் யார்க்கும் அரிது.**

**(குறள் -647)**

**<u>விளக்கம்</u>**

**சொல்லாற்றல் படைத்தவனாகவும், சோர்வு அறியாதவனாகவும், அஞ்சா நெஞ்சங் கொண்டவனாகவும் இருப்பவனை எதிர்த்து எவராலும் வெல்ல முடியாது.**

**திருவள்ளுவர்.**

---

**ஆ) <u>தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி</u>**

**இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.**

## பொருள் எண் 1

பொருள் - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு – கோயம்புத்தூர் மாநகராட்சி – மாநகரை மேம்படுத்துதல் - உத்தேசிக்கப்பட்டுள்ள பணிகள் - சாலைகள் மேம்படுத்துதல், உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் - அரசு நிதியுதவி கோருதல் - அரசாணை பார்வைக்கும், பதிவிற்கும்- மாமன்றத்தின் அனுமதி வேண்தல் -சம்பந்தமாக.

பார்வை – அரசாணை நிலை எண். 20 நாள் 3.2.2010

------------

கோவை மாநகராட்சிப் பகுதியில் பழுதடைந்த சுமார் 75.28 கி.மீ. நீளம் உள்ள சாலைகளை மேம்படுத்தவும், புதுப்பிக்கவும் அரசிடம் நிதியுதவி கோரப்பட்டது. அதனை ஏற்று பார்வையில் கண்ட அரசாணையின்கீழ் ரூ. 26.31 கோடி அனுமதித்து வழங்கியுள்ளது. அதனை மன்றத்திற்கு பார்வைக்கும் பதிவிற்கும் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 12359/2009/MD3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 229 நாள் 18.02.2010</u>**

அரசு ஆணை (நிலை) எண் 20 **Housing and Urban Development ( UD 4(1) ) Department** நாள் 3.02.2010 ஐப் பதிவு செய்யப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 2

பொருள் : உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு–கோயம்புத்தூர் மாநகராட்சி- மாநகரை மேம்படுத்துதல்- உத்தேசிக்கப்பட்டுள்ள பணிகள் - அரசு நிதியுதவி கோரப்பட்டது – அரசு மானியம் வழங்கி அரசாணை பிறப்பிக்கப்பட்டது – சம்பந்தமாக.

பார்வை :
1. மாவட்ட ஆட்சித் தலைவர், கோயம்புத்தூர் அவர்களின் கடித எண்.3/2009 /உ.தி.செ.மா. நாள் 17-12-2009.
2. ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி அவர்களின் கடித எண். 12359/2009/எம்.டி.3 நாள் 21-01-2010 மற்றும் 30-01-2010.
3. நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடித எண்.59908/2009/இ3 நாள் 25-01-2010.
4. அரசு ஆணை (நிலை) எண்.30 நாள் 10-02-2010.

-------------

கோவையில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடைபெற உள்ளதால் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை அரசு மானியத்துடன் மேற்கொள்ள கோவை மாநகராட்சிப் பகுதிகளில் பொது கழிப்பிடங்கள் மற்றும் பள்ளிகளில் உள்ள கழிப்பிடங்களை பராமரிப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் மாநாடு நடைபெறவுள்ள கொடிசியா வளாகத்தில் தண்ணீர் வசதி, நவீன வசதிகளுடன் கூடிய நடமாடும் கழிவறைகள் மற்றும் மாநாடு நடைபெறும் காலத்தில் பணிகள் மேற்கொள்வதற்கும் தற்காலிக துப்புரவு பணியாளர்கள் நியமித்து கீழ்கண்ட பணிகளை அரசு மானியத்துடன் மேற்கொள்ள பார்வை 2-ல் கண்டுள்ள கடிதத்தில் பிரேரணை அரசுக்கு அனுப்பப்பட்டது.

| வ. எண் | பணி விவரம் | எண்ணிக்கை | தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | பொதுக் கழிப்பிடங்கள் மேம்பாடு | 26 எண்ணிக்கைகள் | 87.60 |
| 2. | பள்ளி கழிப்பிடங்கள் மேம்பாடு | 19 எண்ணிக்கைகள் | 50.75 |
| 3 | மாநாடு நடைபெறும் கொடீசியா (codissia) வளாகம் மற்றும் சுற்றுப்பகுதிகளில் குடிநீர் வசதி மற்றும் கிணற்று நீர் வசதிகள் செய்தல் | 3.562கி.மீ நீளம் 80 குடிநீர்த்தொட்டி | 90.30 |
| 4 | நடமாடும் நவீன கழிவறைகள் வாங்குதல் | 60 எண்ணிக்கைகள் | 346.00 |
| 5 | தற்காலிக சுகாதார பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியில் அமர்த்துதல் | 315 ஆட்கள் (15 நாட்களுக்கு மட்டும்) | 35.00 |
| 6 | மாநகராட்சி திருமண மண்டபம் மற்றும் சமுதாய கூடங்கள், மராமத்து பணிகள் செய்தல் | 11 எண்ணிக்கைகள் | 94.10 |
| | | மொத்த தொகை | 703.75 |

கோவை மாநகராட்சியின் பிரேரணையை அரசு ஏற்று மேற்கண்ட அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ள ரூ 703.75 இலட்சம் அரசு மானியமாக வழங்கி பார்வை 4-ல் கண்டுள்ள அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட பணிகளை மேற்கொள்ளவும், இந்த அரசாணையை மாமன்றம் பதிவு செய்யவும் பொருள் ஒப்புதலுக்கு சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண் 12359/2009/MD3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 230 நாள் 18.02.2010**

1. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீா் வழங்கல் (மாந 2) துறை அரசு ஆணை (நிலை) எண் 30 நாள் 10.02.2010 பதிவு செய்யப்பட்டது.
2. அரசு ஆணையின்படி பணிகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 3

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை செயல்படுத்தும் பணிக்கு ரூ. 96.51 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கையிற்கு மத்திய நகர்புற மேம்பாட்டு அமைச்சகத்தின் “ஒப்புதல் வழங்குதல் மற்றும் கண்காணிப்பு குழு” கடந்த 02-02-2007-ல் ஒப்புதல் வழங்கியுள்ளது. மேற்படி திட்டத்திற்கு அரசாணை 160(டி) ந.நி.மற்றும் குடிநீர் வழங்கல் துறை (மா.ந.-II) துறை நாள் 17-04-2007ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி திட்டத்தில் இம்மாநகராட்சியால் பகுதி Iன் கீழ் செயல்படுத்தப்பட உள்ள முதற்கட்ட குப்பை சேகரிப்பு பணிகளின் ஓர் அங்கமான சாலைகளில் படியும் மண் துகள்களை சுத்தப்படுத்தி அகற்றும் பணிகளுக்கு தேவையான 3 எண்ணிக்கைகள் சாலைகளை சுத்தப்படுத்தும் இயந்திரங்களை (Vehicle Mounted Road Sweeping Machines) வாங்குவதற்கென ரூ.154.00 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி இயந்திரங்களை கொள்முதல் செய்யும் பணிக்கு சிப்பம் – 7ன் (Package – 7) கீழ் முதலாவது அழைப்பாக கடந்த 25-08-2009 அன்று ஒப்பந்தப்புள்ளியில் வரவழைக்கப்பட்டதில் ஐந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட ஐந்து ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில் நுட்ப ரீதியாக தேர்ச்சி பெறாத காரணத்தால் மீண்டும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இரண்டாவது அழைப்பாக கடந்த 30-10-2009 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன:

| | | | |
|---|---|---|---|
| 1) | தி/ள்.காம் அவிடா என்வைரோ இன்ஜீனியர்ஸ் பிரைவேட் லிமிடெட், பூனே | : | ரூ.143,98,750.00 |
| 2) | தி/ள்.டி.பி.எஸ், இன்பிராஸ்ராக்ஸர் லிமிடெட், புது டில்லி | : | ரூ.264,25,000.00 |
| 3) | தி/ள். ரூட்ஸ் மல்டி கிளின் லிமிடெட், கோயமுத்தூர் | : | ரூ.113,00,000.00 |

ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படி அனுகூலமான ஒப்பந்ததாரர்கள் அவர்களால் சப்ளை செய்யப்படும் சாலை சுத்தம் செய்யும் இயந்திரமானது அயல்நாட்டு தயாரிப்பிலான (Imported Equipment) இயந்திரத்தினை உள்நாட்டு வாகன சேசிஸ்சினில் பொருத்தப்பட்டு அதன் பின்னர் இம்மாநகராட்சிக்கு வழங்கப்பட வேண்டும்.

மேற்படி குறைவான ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்திருந்த ஒப்பந்ததாரர் தி/ள். ரூட்ஸ் மல்டி கிளின் லிமிடெட், கோயம்புத்தூர் நிறுவனத்தார் அவர்களது ஒப்பந்தப்புள்ளியில் ஆஸ்திரேலியாவின் தி/ள். ஸ்வார்ஸ் இண்டஸ்ட்ரீஸ் (பி) லிமிடெட் என்னும் நிறுவனத்தின் விநியோகஸ்தர்கள் என்ற முறையில் அவர்களது தயாரிப்பிலான இயந்திரத்தினை உள் நாட்டு வாகன சேசிஸில் பொருத்தி சப்ளை செய்வதென தெரிவித்து ஒப்பந்தப்புள்ளியினை சமர்ப்பித்தனர். ஆனால் தி/ள். ரூட்ஸ் மல்டி கிளின் லிமிடெட், கோயமுத்தூர் நிறுவனத்தார் அவர்களது 30-12-2009 தேதியிட்ட கடிதத்தில் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளில் சப்ளை செய்யப்பட வேண்டிய சாலை சுத்தம் செய்யும் இயந்திரம் அயல்நாட்டு தயாரிப்பிலானதாக இருக்க வேண்டுமென தெரிவிக்கப்படவில்லையெனவும் தங்களது நிறுவனம் ஓர் தயாரிப்பு நிறுவனம் என்பதனால் அவர்களால் தயாரிக்கப்பட்ட சாலை சுத்தம் செய்யும் இயந்திரங்களை சப்ளை செய்வதாக தெரிவித்ததனைத் தொடர்ந்து மேற்படி பொருளினை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழு கூடி விவாதித்து முடிவெடுக்க ஆணையர் அவரது 04-01-2010 தேதியிட்ட குறிப்பில் தெரிவித்தார்.

அதன் பேரில் கடந்த 06-01-2010 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு கூட்டத்தில் மேற்படி பொருள் விவாதிக்கப்பட்டு தி/ள். ரூட்ஸ் மல்டி கிளின் லிமிடெட், கோயமுத்தூர் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை நிராகரிக்கவும், அவர்களுக்கு அடுத்ததாக குறைவான ஒப்பந்தப்புள்ளி (L2 Tenderer) கொடுத்துள்ள தி/ள்.காம் அவிடா என்வைரோ இன்ஜீனியர்ஸ் பிரைவேட் லிமிடெட், பூனே நிறுவனத்திடம் வெளிநாட்டு தயாரிப்பிலான சாலை சுத்தம் செய்யும் இயந்திரங்களை தி/ள். ரூட்ஸ் மல்டி கிளின் லிமிடெட், கோயமுத்தூர் நிறுவனத்தினரால் கொடுக்கப்பட்டுள்ள குறைவான விலைப்புள்ளி ரூ.113,00,000/-க்கு சப்ளை செய்ய இயலுமா என கோரவும், அவ்வாறு அந்நிறுவனம் விலைகுறைப்பு செய்து கொடுக்கும் பட்சத்தில் இச்சிப்பத்தில் மீதமாகும் தொகையில் கூடுதலாக ஓர் எண்ணிக்கை சாலை சுத்தம் செய்யும் இயந்திரத்தினை மாமன்ற அனுமதி பெற்று வாங்கலாம் என முடிவு செய்யப்பட்டதனை தொடர்ந்து தி/ள்.காம் அவிடா என்வைரோ இன்ஜீனியர்ஸ் பிரைவேட் லிமிடெட், பூனே நிறுவனத்தாருக்கு கடந்த 11-01-2010 அன்று கடிதம் அனுப்பப்பட்டது.

அதனை தொடர்ந்து மேற்படி நிறுவனத்தார் அவர்களது 23-01-2010 தேதியிட்ட கடிதத்தில் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படி அயல் நாட்டு தயாரிப்பிலான சாலை சுத்தம் செய்யும் இயந்திரத்தினை (Imported Equipment) தி/ள். ரூட்ஸ் மல்டி கிளின் லிமிடெட், கோயமுத்தூர் நிறுவனத்தார் கொடுத்துள்ள விலை விகிதத்தில் சப்ளை செய்ய இசைவு தெரிவித்துள்ளனர்.

எனவே இம்மாநகராட்சியால் செயல்படுத்தப்பட்டு வரும் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு தேவைப்படும் நான்கு (4) எண்ணிக்கைகள் சாலை சுத்தம் செய்யும் இயந்திரங்களை ரூ.152,00,000/- (இரண்டு எண்ணிக்கைகள் 6.5 கன மீட்டர் கொள்ளளவு கொண்ட இயந்திரம் ரூ.78,00,000/- மதிப்பிலும், இரண்டு எண்ணிக்கைகள் 5 கன மீட்டர் கொள்ளளவு கொண்ட இயந்திரம் ரூ.74,00,000/- மதிப்பிலும்) செலவினத்தில் தி/ள்.காம் அவிடா என்வைரோ இன்ஜீனியர்ஸ் பிரைவேட் லிமிடெட், பூனே நிறுவனத்திடம் வாங்குவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> - மாமன்றத்தின் முடிவிற்கு ந.க.எண் :288/2009/ஜே.என் 3

## <u>மாநகர மன்ற தீர்மானம் எண் 231 நாள் 18.02.2010</u>

(அ) ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ், சாலை மேற்புறத்தில் உள்ள மண் துகள்களை சுத்தப்படுத்தி அகற்றும் பணிக்குத் தேவையான 3 எண்ணிக்கைகள் சாலைகள் சுத்தப்படுத்தும் இயந்திரங்களை (Vehicle mounted Road sweeping mechine) வாங்குவதற்கென கடந்த 30.10.2009 அன்று வரவழைக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில், ஒப்பந்த நிபந்தனைகளின்படி, குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நிறுவனமான தி/ள். ரூட்ஸ் மல்டி கிளீன் லிமிடெட், கோவை நிறுவனம் அயல்நாட்டு தயாரிப்பிலான இயந்திரம் வழங்க இயலாது என தெரிவித்ததால், இந்நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை நிராகரித்து, இரண்டாவது குறைந்த ஒப்பந்தப் புள்ளியான தி/ள். காம் அவிடா என்வைரோ இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட், புனே நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தி/ள். ரூட்ஸ் மல்டி கிளீன் லிமிடெட், கோவை நிறுவனம் வழங்கிய ஒப்பந்தப்புள்ளி விகிதத்திற்கே வழங்க விலை குறைப்பு செய்து 23.1.2010 ம் தேதிய கடிதத்தில் அயல்நாட்டு தயாரிப்பிலான இயந்திரம் வழங்க ஒப்புக் கொண்டுள்ளதால் தி/ள். காம் அவிடா என்வைரோ இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட், புனே நிறுவனத்திடமிருந்து ஒரு எண்ணிக்கையிலான 6.5 க.மீ. கொள்ளளவு கொண்ட இயந்திரம் ரூ. 39.00 இலட்சம் மதிப்பிலும், 2 எண்ணிக்கையிலான 5 க.மீ. கொள்ளளவு கொண்ட இயந்திரம் ஒன்று ரூ. 37.00 இலட்சம் என்ற மதிப்பிலும் வாங்க மாமன்றம் ஒப்புதல் வழங்க தீர்மானிக்கப்பட்டது.

(ஆ) மேற்படி மூன்று இயந்திரங்கள் வாங்கி பயன்படுத்தி அதன் செய்முறை இயக்கம், பயன்பாடு திருப்தி அளிக்கும் பட்சத்தில் இத்திட்டத்தில் மீதமுள்ள தொகையில் கூடுதலாக சாலைகளை சுத்தப்படுத்தி மண்துகள்கள் அகற்றும் இயந்திரங்கள் நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி பெற்று தனி நடவடிக்கை எடுத்து வாங்கவும் மாமன்றம் ஒப்புதல் வழங்க தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 4

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப்பணிகளுக்கு கிழக்கு சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதி ஒதுக்கீடு மற்றும் பொது நிதி ஒதுக்கீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் 06-01-2010 கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 02-02-2010 பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ. .எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | **9996/09/** எம்.டி.2 | **வார்டு எண்.7 கள்ளிமடை மாநகராட்சி ஆரம்ப பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் புதுப்பித்து கட்டுதல்** | 17.00 | 20.01.2010 முதல் அழைப்பு | தி/ள்.எஸ்.ஆர். இன்ஜினியர்ஸ் & பில்டர்ஸ் | 4.63% அதிகம் |
| 2 | **9783/09/** எம்.டி.2 | **வார்டு எண். 7 போயர் வீதி கிழக்கு மாநகராட்சி ஆரம்ப பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல்** | 17.00 | 20.01.2010 முதல் அழைப்பு | தி/ள்.எஸ்.ஆர். இன்ஜினியர்ஸ் & பில்டர்ஸ் | **4.34%** அதிகம் |
| கிழக்கு சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதி ஒதுக்கீடு | | | | | | |
| 3 | **3859/09/** எம்.டி.3 | **வார்டு.எண். 21-ல் பாலசுப்பிரமணியம் நகர் பகுதியில் சமுதாயக் கூடம் கட்டுதல்** | 10.00 | 06.01.2010 ஐந்தாம் அழைப்பு | திருமதி. பி. லட்சுமி | 4.94% அதிகம் |
| 4 | **11662/09/** எம்.டி.3 | **வார்டு எண்.30 காந்திபுரம்3வது வீதியில் சமுதாய கூடம் கட்டுதல்** | 10.00 | 28.01.2010 இரண்டாம் அழைப்பு | திருமதி. பி. லட்சுமி | 4.96% அதிகம் |
| 5 | **11661/09/** எம்.டி.3 | **வார்டு எண்.29 இளங்கோ நகர் பகுதியில் சமுதாய கூடம் மற்றும் படிப்பகம் கட்டுதல்** | 12.00 | 28.01.2010 இரண்டாம் அழைப்பு | திருமதி. கே.பங்கஜம் | 4.85% அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு- இப்பணி குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறுஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும், மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: **9996/09/**எம்.டி.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 232 நாள் 18.02.2010</u>**

**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

---

## பொருள் எண் 5

கோயம்புத்தூர் மாநகராட்சி, வார்டு எண்.34, அழகேசன் சாலையில் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு புதியதாக தங்கும் விடுதி கட்டுவதற்கு மதிப்பீடு ரூ 150.00 இலட்சத்திற்கு நகராட்சி இயக்குநர் அவர்கள் 14-07-2008-ல் நிர்வாக அனுமதி வழங்கியுள்ளார். இப்பணிக்கு, இரண்டாம் முறையாக 23-12-2009-ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன

1. தி /ள் என்.பி.கே. அசோசியேட்ஸ்,
   86, கே.எஸ்.ராமசாமி வீதி,
   கே.கே.புதூர்,
   சாய்பாபா காலனி, கோயம்புத்தூர் - 38.

2. தி /ள் செல்லி அசோசியேட்ஸ்,
   28/18/26-R, 3-வது மாடி, கார்டன் குளோப்,
   டி.ஆர்.அப்பார்ட்மெண்ட்,
   மாவட்ட நூலகம் எதிர்புறம்,
   வீரப்பத்திர வீதி, ஈரோடு 638 003.

3. தி /ள் ஆர்.கே.ஆர்.கன்ஸ்ட்ரக்சன்ஸ்,
   189- E, பொள்ளாச்சி மெயின் ரோடு,
   காந்திஜி லேஅவுட்,
   சுந்தராபுரம், கோயம்புத்தூர் - 24

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை நிர்வாக ஆணையரகத்தில் திறனாய்வு தி/ள் ஆர்.கே.ஆர்.கன்ஸ்ட்ரக்சன்ஸ், கோயம்புத்தூர்-24 அவர்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி தகுதியானது என்று கண்டறியப்பட்டு விலைப்புள்ளி உறை 27-01-2010 அன்று திறக்கப்பட்டது. விலைப்புள்ளிகளை பரிசீலனை செய்ததில் ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு தொகையைவிட 9.50% அதிகமாக விலைப்புள்ளியை கொடுத்துள்ளதால் விலையை குறைக்கக் கோரி (Negotiation) கடிதம் அனுப்பியதில் இந்நிறுவனத்தினர் 28-01-2010ல் 9.50% சதவிகிதத்திலிருந்து 9.24% சதவிகிதமாக விலைப்புள்ளிகளை குறைத்து கொடுத்துள்ளனர். இவர்கள் கொடுத்துள்ள விலைப்புள்ளிகளை மீண்டும் குறைக்கக்கோரி கடிதம் அனுப்பியதில் 9.24% சதவிகிதத்திலிருந்து 7.00% சதவிகிதமாக குறைத்து கொடுத்துள்ளனர்.

இப்பணிக்கான மதிப்பீடு ரூ 150.00 இலட்சத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கான நிதி முழுவதும் அரசு வழங்கியுள்ளது. இதில் ஒப்பந்தப்புள்ளி ரூ1,41,49,753/- இலட்சத்திற்கு கோரப்பட்டது. கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு தகுதியான ஒப்பந்ததாரர் தி/ள் ஆர்.கே.ஆர்.கன்ஸ்ட்ரக்சன்ஸ், கோயம்புத்தூர் அவர்கள் மதிப்பீட்டுத் தொகையைவிட கூடுதலாக கொடுத்துள்ள விலையை குறைக்க கோரியபிறகு 7% சதவிகிதத்திற்கு (ரூ 9,90,482/-) மேல் குறைக்க இயலாது என தெரிவித்துள்ளார்.

அதன்படி மொத்த ஒப்பந்ததொகை ரூ 1,51,40,235/- (1,41,49,753/- + 9,90,482/-) ஆகிறது. கோரப்பட்ட ஒப்பந்த தொகை மற்றும் மிகை ஒப்பந்த தொகையைவிட 7% கூடுதலான தொகையும் சேர்த்து ரூ 1,51,40,235/- ஆகும். மதிப்பீட்டில் 2.5 % சென்டேஜ் கட்டணம் ரூ 3,75,000/- ம் பெட்டி சூப்பர்வசிங் கட்டணம் மற்றும் தவிர்க்க முடியாத இனங்கள் மற்றும் விலை வித்தியாசங்களுக்கு ரூ 4,25,241/- ம் சேர்த்து ரூ 8,00,241/- ஆகிறது. இந்த தொகையும் இப்பணியின் பயன்பாட்டிற்கு பயன்படுத்தலாம்.

மேலும் இப்பணியின் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ரூ.9,90,482 - ரூ. 8,50,247 = ரூ.1,40,235 ஐ நகரியல் பயிற்சி நிறுவனத்திடம் கோரவும், மதிப்பீட்டிற்கு 7.00 சதவிகிதத்திற்கு அதிகமாக கொடுத்துள்ள தி/ள் ஆர்.கே.ஆர். கன்ஸ்ட்ரக்சன்ஸ், கோயம்புத்தூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று நகராட்சி நிர்வாக ஆணையரகத்தின் ஒப்புதல் பெற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்: **13610/2008/**எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 233 நாள் 18.02.2010**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

### பொருள் எண் 6

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை, ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 10.02.2010 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி நாள் | ஒப்பந்த தாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| **BSUP** | | | | | | |
| 1 | **2017/09/** எம்.டி.2 | வார்டு எண்: 11 தேவேந்திர வீதியில் பாதாள சாக்கடை குழாய் அமைத்தல் | **9.40** | 05.02.2010 ஓன்பதாம் அழைப்பு | திருமதி. பி.லட்சுமி | **4.65** அதிகம் |
| 2 | **2059/09/** எம்.டி.2 | வார்டு எண்: 21 ராஜீவ் நகரில் பாதாள சாக்கடை குழாய் அமைத்தல். | **8.65** | 05.02.2010 ஓன்பதாம் அழைப்பு | திருமதி. பி.லட்சுமி | **4.98** அதிகம் |
| 3 | **2054/09/** எம்.டி.2 | வார்டு எண்: 21 அலமேலு மங்கம்மாள் லேஅவுட்டில் பாதாள சாக்கடை குழாய் அமைத்தல். | **8.30** | 05.02.2010 ஓன்பதாம் அழைப்பு | திருமதி. பி.லட்சுமி | **4.99** அதிகம் |
| சட்டமன்ற உறுப்பினர் நிதி ஓதுக்கீடு | | | | | | |
| 4 | **10164/09/** எம்.டி.3 | வார்டு எண்: 35 காமராஜபுரம் சி.எம்.சி. காலனியில் பொதுக்கழிப்பிடம் கட்டுதல். | **7.00** | 05.02.2010 மூன்றாம் அழைப்பு | திருமதி. பி.லட்சுமி | **4.97** அதிகம் |
| மாநகராட்சி பொது நிதி | | | | | | |
| 5 | **6997/09/** எம்.டி.4 | வார்டு எண்: 51 டி.பி.சாலையில் இருபுறமும் ரமணா மருத்துவமனை முதல் சுக்கிரவார் பேட்டை வரை நடைபாதை அமைத்தல். | **9.90** | 05.02.2010 இரண்டாம் அழைப்பு | திருமதி. பி.லட்சுமி | **4.97** அதிகம் |
| 6 | **7360/09/** எம்.டி.2 | வார்டு எண்: 68 ரத்தினபுரி மாநகராட்சி மேல்நிலைப் பள்ளி வளாகத்தில்சமையலறை மற்றும் உணவு அருந்தும் அறை கட்டுதல் | **20.00** | 20.01.2010 முதல் அழைப்பு | திரு.ஆர். செல்வராஜ் | **4.81** அதிகம் |
| 7 | **12980/09/** எம்.டி.2 | வார்டு எண்: 37 இடையர் வீதியில் நடைபாதைஅமைத்தல் | **7.50** | 05.02.2010 இரண்டாம் அழைப்பு | திருமதி. பி.லட்சுமி | **4.96** அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்ற கூட்டத்தாள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண்:2017/09/எம்.டி.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 234 நாள் 18.02.2010</u>**

**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

---

## பொருள் எண் 7

கோவை மாநகராட்சி மேற்கு மண்டலம் பொறியியல் பிரிவு 5 வார்டு எண்.64க்குட்பட்ட மேட்டுப்பாளையம் சாலை பேருந்து நிலையத்தில் கூடுதல் வசதிகள் செய்யும் பணிக்கு ரூ.75.00 இலட்சத்தில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

தற்போது, ஏற்கனவே பெறப்பட்ட தொழில்நுட்ப அனுமதியில் வழிவகை செய்யப்பட்டுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது. தற்பொழுது இப்பேருந்து நிலையத்தில் முகப்பு தோற்றம், உட்புற பணிகள் மற்றும் பொது மக்களின் வசதிக்காக நவீன வசதிகளை உள்ளடக்கிய புதிய வகை பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேலும் ஏற்கனவே ஒப்புதல் பெறப்பட்டுள்ள மதிப்பீட்டில் இவ்வகை பணிகளுக்கு வழிவகை செய்யப்படாத காரணத்தால் புதிய வகை பணிகளை மேற்கொள்ள ரூ.75.00 இலட்சத்தில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பணிக்கு 2009-2010-ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, இப்பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதி அளிக்கலாம். ந.க.எண். 1237/10/எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 235 நாள் 18.02.2010**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 8

பொருள் - கோவை மாநகராட்சி – மேற்கு மண்டலம் - பொறியியல் பிரிவு - வார்டு எண் 34 மற்றும் 64 – மேட்டுப்பாளையம் சாலை, பை-பாஸ் சாலை, அருணாசலம் சாலை மற்றும் என்.எஸ்.ஆர். சாலை சந்திப்புகளை அபிவிருத்தி செய்தல் பணிக்கென ரூ. 65,00,000/-க்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி கோருதல்-

-------------

எதிர்வரும் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு – 2010 - கோவை-க்கென கோவை மாநகராட்சி உள்கட்டமைப்புகளை அபிவிருத்தி செய்ய வேண்டியது அவசியமாகிறது. எனவே பிரதான சாலையான மேட்டுப்பாளையம் சாலை, இணைப்புச் சாலை சந்திப்புகளை அபிவிருத்தி செய்ய அவசியமாகிறது.

மேற்படி பணிக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதி அளிக்கலாம். ந.க.எண். 684/10/எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 236 நாள் 18.02.2010**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 9

பொருள் - பணியமைப்பு - கோவை மாநகராட்சி – திருமதி எ.பி. உமா மகேஸ்வரி, பல நோக்கு சுகாதார பணியாளர், சிங்காநல்லூர் நகர்நல மையம் - உடுமலைப்பேட்டை நகராட்சிக்கு மாறுதல் கோருவது – தொடர்பாக.

----------

கோயம்புத்தூர் மாநகராட்சி, சிங்காநல்லூர் நகர்நல மையத்தில் பல நோக்கு சுகாதாரப் பணியாளராக பணிபுரியும் திருமதி. எ.பி. உமா மகேஸ்வரி அவர்கள், தனது குடும்ப சூழ்நிலை காரணமாக தனக்கு உடுமலைப்பேட்டை நகராட்சிக்கு பணிமாற்றம் செய்து தருமாறு விண்ணப்பித்துள்ளார்.

எனவே, திருமதி எ.பி. உமா மகேஸ்வரி, பலநோக்கு சுகாதாரப் பணியாளரை உடுமலைப்பேட்டை நகராட்சியில் பலநோக்கு சுகாதாரப் பணியாளர் பணியிடத்திற்கு ஒருவழி மாறுதல் செய்ய மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- அனுமதிக்கலாம். மாமன்ற அனுமதிக்குப் பின் மேற்படி தீர்மானத்தை ஆணையர், உடுமலைப்பேட்டை நகராட்சி அவர்களுக்கு அனுப்பி வைக்கலாம்.

ந.க.எண். 9630/09/எம்.சி. 3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 237 நாள் 18.02.2010**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 10

பொருள் - பணியமைப்பு - கோவை மாநகராட்சி – திருமதி எக்ஸ். பிலோமினா, பல நோக்கு சுகாதாரப் பணியாளர், கே.கே.புதூர் நகர்நல மையம் - சென்னை மாநகராட்சிக்கு மாறுதல் கோருவது – தொடர்பாக.

----------

கோயம்புத்தூர் மாநகராட்சி, கே.கே.புதூர் நகர்நல மையத்தில் பல நோக்கு சுகாதாரப் பணியாளராக பணிபுரியும் திருமதி. எக்ஸ். பிலோமினா அவர்கள், தனது குடும்ப சூழ்நிலை காரணமாக தனக்கு சென்னை மாநகராட்சிக்கு பணிமாற்றம் செய்து தருமாறு விண்ணப்பித்துள்ளார். மேலும் சென்னை மாநகராட்சி திரு.வி.க. நகர்நல மையத்தில் பலநோக்கு சுகாதாரப் பணியாளராகப் பணிபுரியும் திருமதி. மு. லதா, கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு மாறுதலில் வர சம்மதம் தெரிவித்துள்ளதாகவும், தங்களுக்கு மனமொத்த மாறுதல் வழங்குமாறும் கேட்டுள்ளார்.

எனவே, திருமதி எக்ஸ். பிலோமினா, பலநோக்கு சுகாதாரப் பணியாளரை சென்னை மாநகராட்சியில் பலநோக்கு சுகாதாரப் பணியாளர் பணியிடத்திற்கு மாறுதல் செய்ய மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- அனுமதிக்கலாம். மாமன்ற அனுமதிக்குப் பின் மேற்படி தீர்மானத்தை ஆணையர், சென்னை மாநகராட்சி அவர்களுக்கு அனுப்பி வைக்கலாம்.

ந.க.எண். 9630/09/எம்.சி. 3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 238 நாள் 18.02.2010**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

## பொருள் எண் 11

கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலம், சீனிவாசபுரம் மாநகராட்சி திருமண மண்டபத்தைப் பராமரிக்க தனியாருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட உரிமக்காலம் 09.01.2010-உடன் முடிவடைந்தது. மீண்டும் ஏலம் நடத்த வேண்டிய உள்ள நிலையில் மேற்கண்ட திருமண மண்டபம் உள்ள இடத்தில் பலமாடி வாகனம் நிறுத்துமிடம் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது,

மேலும், கோவை மாநகராட்சி, கண்காணிப்புப் பொறியாளர் அவர்கள் தமது கடித எண்-41102/06/J(N) நாள்-06.01.2010-ன்படி மேற்படி இடத்தில் மாநகராட்சியால் தனியார் பங்களிப்புடன் வணிக வளாகங்களுடன் கூடிய அடுக்குமாடி தானியங்கி வாகனம் நிறுத்துமிடம் அமைக்க உத்தேசிக்கப்பட்டு, இத்திட்டம் செயல்படுத்துவதற்கான விருப்பகேட்பு முன்மொழிவுகள் (Request for Proposal) மற்றும் ஒப்பந்த ஷரத்துக்கள் அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது என்றும், மேற்படி பணி துவங்கும் சமயத்தில் இவ்விடத்தில் உள்ள திருமண மண்டபத்தை மாநகராட்சி வசம் ஒப்படைப்பு செய்ய வேண்டும் என்ற நிபந்தனையோடு தேவையான காலநீட்டிப்பு வழங்கலாம் என்று குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, உரிமை காலம் 09.01.2010-ம் தேதி முடிவடைவதால் 10.01.2010-ம் தேதி முதல் 09.04.2010-ம் தேதி வரை உரிமதாரரால் கடைசியாக செலுத்தப்பட்ட ஆறுமாத உரிமக் கட்டணமான ரூ.1,15,000/-ல் 10.01.2010 முதல் 09.04.2010 வரை ரூ. 50,008/- செலுத்தி மூன்று மாத காலத்திற்கு மட்டும் நீட்டித்து உரிமை வழங்க அவசர நிலை கருதி வரிவிதிப்பு மற்றும் நிதிக் குழுவின் முன்ஒப்புதல் பெற்று மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுவதற்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக் குழுவின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டதில் குழு தனது தீர்மான எண் 43 நாள் 15.02.2010ல் ஒப்புதல் அளித்துள்ளதை மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்: 13081/2003/அ7(வ)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 239 நாள் 18.02.2010**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. 9.4.2010 க்குப் பின்பு துறைமூலம் பராமரிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 12

பொருள்: கோவை மாநகராட்சி தியாகி குமரன் மார்க்கெட்டிலுள்ள – மொத்த காய்கறி மார்க்கெட் - மேட்டுப்பாளையம் சாலைக்கு ஏற்கனவே மாற்றம் செய்யப்பட்டது – மேட்டுப்பாளையம் ரோடு எம்.ஜி.ஆர் மார்க்கெட் கடை எண்.77-ஐ திரு.சென்னகேசவலு நாயுடு என்பவருக்கும் கடை எண்.72-ஐ திரு.ராஜு நாயுடு என்பவருக்கும் மற்றும் கடை எண்.74-ஐ திரு.S.M.அப்துல் கரீம் என்பவருக்கும் ஒதுக்கீடு செய்ய அனுமதி கோருவது – குறித்து.

-----

கோவை மாநகராட்சிக்குட்பட்ட தியாகி குமரன் மார்க்கெட்டில் உள்ள மொத்த காய்கறி மார்க்கெட்டானது மேட்டுப்பாளையம் சாலைக்கு மாற்ற உத்தேசிக்கப்பட்டு ஏற்கனவே வியாபாரம் செய்து வந்த வியாபாரிகளது பட்டியல் தயார் செய்யப்பட்டது. (மாமன்ற தீர்மானம் 19 தேதி 4.4.94)

முதற்கட்டமாக 60 கடைகள் கட்டி 60 வியாபாரிகளுக்கு கடை ஒதுக்கீடு செய்யப்பட்டது. (மாமன்ற தீர்மான எண்.1919, தேதி 20.06.94)

மீண்டும் 18 கடைகள் கட்டப்பட்டு எஞ்சிய 18 வியாபாரிகளுக்கு கடை ஒதுக்கீடு செய்யப்பட்டது. (மாமன்ற தீர்மான எண்.3245 தேதி 13.1.96). இதில் 10 நபர்கள் மட்டுமே கடைகளின் பொறுப்பினை ஏற்றுக் கொண்டனர். எஞ்சியவர்கள் (திரு. முருகன், PVR பாலன் உட்பட) 9 நபர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட கடைகளின் பொறுப்பினை ஏற்க காலம் தாழ்த்தி வந்தனர்.

இந்நிலையில் பழைய வியாபாரிகளுக்கு முன்னுரிமை கொடுத்து கடைகளை ஒதுக்கீடு செய்யும் முறையினை ரத்து செய்து G.O.No. 85, MAWS எண்ணிட்ட தேதி 19.07.2000-ல் அரசு ஆணை வெளியிடப்பட்டது. இதனால் இதுவரை காலம் தாழ்த்தி வந்த வியாபாரிகள், தங்களுக்கு ஒதுக்கப்பட்ட கடைகளின் பொறுப்பினை ஏற்க மாநகராட்சியினை அணுகினர். இருப்பினும் இவர்களுக்கு கடைகளை ஒதுக்கீடு செய்ய பரிந்துரைக்கப்பட்டு அதன் மீது அரசின் தெளிவுரை கோர மாமன்ற தீர்மான எண்.420 தேதி 28.03.02-ன்படி முடிவு செய்து அரசுக்குஅனுப்பப்பட்டது.

இதன்மீது (CMA அலுவலகத்தில் இருந்து பெறப்பட்ட தெளிவுரை கடிதம் 42522/02/MCB) தேதி 5.11.04-ல் மேற்படி கடைகளை அரசாணை 85-ன் அடிப்படையில் பொது ஏவத்தில் விடுமாறு அறிவுறுத்தப்பட்டது. அதன் அடிப்படையில் மேற்படி 9 கடைகளை கடந்த 30.06.2005-ம் தேதியன்று மாநகராட்சியானது பொது ஏலத்திற்கு கொண்டு வந்தது.

மேற்படி 9 கடைகள் பொது ஏலத்தின் மூலம் ஒப்படைப்பு செய்யப்படுவதை எதிர்த்து W.P.எண்கள் 24052/05 மற்றும் 24053/05 ஆகியவற்றின்படி திரு.PVR பாலன் மற்றும் திரு.தங்கமணி ஆகியோர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்ந்து அதில் W.P.M.P. எண்கள் 26223/05 மற்றும் 26225/05 ஆகியவற்றின்படி மாநகராட்சியின் பொது ஏலத்திற்கு எதிராக தடை உத்திரவுகளும் பெற்றனர். இதனால் மேற்படி கடைகளை மாநகராட்சியால் பொது ஏலம் மூலம் ஒப்படைப்பு செய்ய இயலாத நிலையில் இருந்தது.

மேற்படி உயர்நீதிமன்ற வழக்குகளில் கடந்த 13.11.09 அன்று இறுதி உத்திரவுவழங்கப்பட்டுள்ளது. அதன்படி கடை எண்.77-ஐ திரு.சென்னகேசவலு நாயுடு என்பவருக்கும் கடை எண்.72-ஐ திரு.ராஜு நாயுடு என்பவருக்கும் மற்றும் கடை எண்.74-ஐ திரு.S.M.அப்துல் கரீம் என்பவருக்கும் ஒதுக்கீடு செய்யுமாறு உத்திரவிடப்பட்டுள்ளது.

மேற்படி PVR பாலன் மற்றும் தங்கமணி ஆகியோர் மேற்படி உயர்நீதிமன்ற உத்திரவுகளின்படி கடைகளை தங்களுக்கு ஒதுக்கீடு செய்யுமாறு 07.12.09-ந் தேதிய கடிதங்களின் மூலம் கோரியுள்ளனர். இதுபோலவே மீதமுள்ள வியாபாரிகளில் (உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் தொடராதவர்கள்) திரு.SMS. அப்துல் கரீம் திரு.ராஜுநாயுடு திரு.சென்னைகேசவலு நாயுடு ஆகியோர்கள் தங்களது 07.12.09-ந் தேதிய கடிதங்களில் மேற்படி வழக்குகள் தொடர்ந்த PVR பாலன் மற்றும் தங்கமணி ஆகியோர்களுக்கு எந்த காரணத்திற்காக கடை ஒதுக்கீடு செய்யப்படாமல் இருந்ததோ அதே காரணத்திற்காக தான் தங்களுக்கும் கடைகள் ஒதுக்கீடு செய்யப்படவில்லை எனவும் தற்போது மேற்படி PVR பாலன் மற்றும் தங்கமணி ஆகியோர்களுக்கு உயர்நீதிமன்றம் அளித்த உத்திரவின் அடிப்படையிலேயே தங்களுக்கும் ஏற்கனவே மாநகராட்சி தீர்மானங்களின்படி பரிந்துரைக்கப்பட்ட கடைகளை ஒதுக்கீடு செய்யுமாறு கோரியுள்ளனர்.

இது தொடர்பாக பெறப்பட்டுள்ள மாநகராட்சி உயர் நீதிமன்ற வழக்கறிஞர் திரு.ஆர்.சிவக்குமார் அவர்களது கருத்துரை தேதி 21.11.2009-ல் மேற்படி கடைகள் பல ஆண்டுகளாக வழக்குகளின் காரணமாக காலியாக வைக்கப்பட்டுள்ளதால், மேற்படி உயர்நீதிமன்ற உத்திரவுகளின்படி மேற்படி கடை எண்.61-ஐ திரு. PVR பாலன் என்பவருக்கும், கடை எண். 76-ஐ திரு.தங்கமணி என்பவருக்கும் ஒதுக்கீடு செய்யலாம் எனவும், மேலும் வழக்குகள் தற்போது முடிவுற்றுவிட்டதால் எஞ்சிய 7 கடைகளை பொது ஏலத்திற்கு கொண்டு வரலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

மற்றும் மேற்படி மார்க்கெட்டில் உள்ள கடை எண்.61 மற்றும் 76-க்கு அருகிலுள்ள மற்ற 16 கடைகளுக்கும் கடை ஒதுக்கி வழங்கப்பட்ட நாள் முதல் கடை வாடகை ஒவ்வொரு மூன்றாண்டு காலத்திற்கும் 15 சதவீதம் உயர்வு செய்யப்பட்டு வந்ததில் கடைசியாக மாநகர மன்றத் தீர்மானம் எண் 239 நாள் 29.09.08-ல் 01.04.2007 முதல் 31.03.2010 முடிய மூன்றாண்டுகளுக்கு உரிமம் புதுப்பித்து 15 சதவீதம் வாடகை உயர்வு செய்ததில் மாதாந்திர உரிமம் கட்டணம் ரூ.1335- ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

எனவே மேற்படி கடை எண்.61 மற்றும் 76-ஐ மாதாந்திர உரிமம் கட்டணம் ரூ.1335- ஆக நிர்ணயம் செய்தும், ஒரு வருட வாடகை முன்பணமாக (1335x12=16020-) ரூ.16020-ஐ வசூலிக்கவும், மாநகர மன்ற தீர்மான எண்.163 நாள்.29.12.2009-ல் மேற்படி பொருள் தொடர்பாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

தற்சமயம் உயர்நீதி மன்ற தீர்ப்பு எண்.W.P.Nos.26175 to 26177 of 2009 and M.P.Nos.1, 1 & of 2009 நாள்.23.12.2009-ல் வழங்கப்பட்டுள்ள தீர்ப்புரையில் ஏற்கனவே கடை ஒதுக்கீடு பெற்ற திரு.P.V.R.பாலன் மற்றும் திரு.தங்கமணி ஆகியோரது வழக்கிற்கு வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையிலேயே (1) திரு.சென்னகேசவலு நாயுடு, (2) திரு.ராஜு நாயுடு மற்றும் (3) திரு.S.M.அப்துல் கரீம் ஆகியோரால் சமர்ப்பிக்கப்பட்ட 7.12.2009-ம் தேதிய விண்ணப்பங்களின் மீது பரிசீலனை செய்து நான்கு வாரங்களுக்குள் பதில் அளிக்குமாறு உத்திரவிடப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி பொருள் தொடர்பாக உயர்நீதிமன்ற வழக்கறிஞரின் கருத்துரை கோரப்பட்டது. அதற்கு உயர்நீதிமன்ற வழக்கறிஞரின் 06.02.10-ம் தேதிய கருத்துரையில் உயர்நீதிமன்ற தீர்ப்பு எண். W.P.Nos.26175 to 26177 of 2009 and M.P.Nos.1, 1 & of 2009 நாள்.23.12.2009-ல் வழங்கப்பட்டுள்ள தீர்ப்புரையில் ஏற்கனவே ஒதுக்கீடு பெற்ற திரு.P.V.R.பாலன் மற்றும் திரு.தங்கமணி ஆகியோர்களுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையிலேயே (1) திரு.சென்னகேசவலு நாயுடு, (2) திரு.ராஜு நாயுடு மற்றும் (3) திரு.S.M.அப்துல் கரீம் ஆகியோரால் 07.12.2009-ல் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களின் மீது நான்கு வாரங்களுக்குள் பதில் அளிக்குமாறு உத்திரவிடப்பட்டுள்ளது. இத் தீர்ப்புரையில் ஆணையாளர் நேரிடையாக பரிசீலனை செய்து நான்கு வாரங்களுக்குள் பதில் அளிக்க வேண்டும். எனவே மேற்படி மூன்று நபர்களுக்கு மட்டும் மேட்டுப்பாளையம் ரோடு கடை எண்.77, 72, 74 ஆகிய மூன்று கடைகளை ஒதுக்கீடு செய்வது தொடர்பாக பரிசீலித்து மேற்படி கடைகளை ஒதுக்கீடு வழங்கலாம் என கருத்துரை தெரிவித்துள்ளார்.

ஆகவே, மேற்படி மூன்று கடைகளை (1) திரு.சென்னகேசவலு நாயுடு, (2) திரு.ராஜு நாயுடு மற்றும் (3) திரு.S.M.அப்துல் கரீம் ஆகியோர்களுக்கு ஒதுக்கீடு வழங்க ஆணையரிடம் 13.02.2010-ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

எனவே, மேட்டுப்பாளையம் ரோடு எம்.ஜி.ஆர் மார்க்கெட் கடை எண்.77-ஐ திரு.சென்னகேசவலு நாயுடு என்பவருக்கும் கடை எண்.72-ஐ திரு.ராஜு நாயுடு என்பவருக்கும் மற்றும் கடை எண்.74-ஐ திரு.S.M.அப்துல் கரீம் என்பவருக்கும் ஒதுக்கீடு வழங்கவும், மேற்படி இரு நபர்களான திரு.P.V.Rபாலன் மற்றும் திரு.தங்கமணி ஆகியோர்களுக்கு ஏற்கனவே மாதாந்திர வாடகை நிர்ணயம் செய்யப்பட்டது போலவே இந்நபர்களுக்கும் கடை ஒன்றிற்கு மாதாந்திர உரிமம் கட்டணம் ரூ.1335- ஆக நிர்ணயம் செய்தும், ஒரு வருட வாடகை முன்பணமாக (1335x12=16020-) ரூ.16020-ஐ வசூலிக்கவும் வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண்.42 நாள்.15.02.2010-ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு -</u> அனுமதிக்கலாம். ந.க.எண்.11486/2009/ அ1 (மே)

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 240 நாள் 18.02.2010</u>

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண். 42 நாள் 15.02.2010 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 13

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - வார்டு எண் 57 இந்திரா நகர் பகுதியில் சமுதாய கூடம் கட்டப்பட்டுள்ளது – பொது மக்கள் பயன்பாட்டிற்கு பயன்படுத்துதல் - தொடர்பாக.

--------

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.57, இந்திரா நகர் பகுதியில் உள்ள புதிதாக சமுதாய கூடம் 2006.13 ச.அடி கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. கட்டிடம் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்தும் பொருட்டு கட்டிடத்திற்கு தற்போதைய வழிகாட்டி மதிப்பின்படி தினவாடகை ரூ.4,500/- உதவிப் பொறியாளர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் வாடகை நிர்ணயம் செய்யவும் சமுதாய கூடத்தை உபயோகப்படுத்துபவர்களிடம் வைப்புத் தொகையாக ரூ.5,000/- பெற்று பின்னர் திரும்ப வழங்கவும் ஏற்கனவே உள்ள விதிமுறைகளின்படி சமுதாய கூடத்தை பயன்பாட்டிற்கு அளிக்கவும் வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி கடந்த 26.9.2009 ம் தேதி அன்று பொருள் வைக்கப்பட்டது. மேற்படி நிதிக்குழு கூட்டத்தில் மேற்படி இடத்தை மறுபடியும் நேராய்வு செய்து சதுரடி மற்றும் தினசரி வாடகை மற்றும் வைப்புத் தொகை குறைப்பு சம்பந்தமாக மன்றப்பொருள் திருத்தி சமர்ப்பிக்க தெரிவித்து கோப்பு திருப்பப்பட்டது.

எனவே உதவி ஆணையாளர் (மே) (பொ) அவர்கள் கடந்த 9.12.2009 ம் தேதியன்று சம்பந்தப்பட்ட உதவி பொறியாளர் (திருமதி. புவனேஸ்வரி) உடன் இந்திரா நகர் பகுதியிலுள்ள சமுதாய கூடத்தை ஆய்வு செய்து கீழக்கண்டவாறு குறிப்பு சமர்ப்பித்துள்ளார்.

மேற்படி சமுதாய கூடம் கட்டி முடிக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும் உபயோகப்படுத்தப்படாமல் உள்ளது. இப்பகுதி தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் பகுதியாகும்.

எனவே இப்பகுதி மக்கள் பயன்படுத்தக்கூடிய வகையில் கட்டப்பட்டுள்ள சமுதாய கூடத்திற்கு ஒரு தளம் மட்டுமே உள்ளது. இதில் ஹால் 1304 சதுரடியும், இரண்டு அறைகள் 330 சதுரடியிலும், கழிப்பிடங்கள் 225 சதுரடியிலும், போர்ட்டிகோ 144 சதுரடியிலும் உள்ளது. தாழ்த்தப்பட்ட ஏழை எளிய மக்கள் பயன்பாட்டிற்கென கட்டப்பட்டுள்ள இந்த கூடத்திற்கு ஒரு நாளைக்கு சிறப்பினமாக ரூ.500/- யை வாடகை தொகையாகவும், ரூ.2,500/- யை முன் வைப்பு தொகையாகவும், ரூ.65/- யை சர்வீஸ் சார்ஜாகவும் வசூல் செய்யலாம் என தெரிவித்துள்ளார். எனவே மேற்படி சமுதாய கூடத்தை பயன்பாட்டிற்கு அளிக்க வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண்.41 நாள்.15.02.2010-ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.6192/09/D1(மே)

## மாநகர மன்ற தீர்மானம் எண் 241 நாள் 18.02.2010

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண். 41 நாள் 15.02.2010 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி